பொலன்னறுவை மாநகர சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொலன்னறுவை மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மாநகர சபைகள் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொலன்னறுவை மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பொலன்னறுவை மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

குறித்த நியமத்துடன் தொடர்பான இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
உள்ளூராட்சி மன்ற நிறுவனங் களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் 6.20 இன் பிரகாரம் அறிக்கை இடப்படுகின்ற காலப்பகுதியின் இறுதி திகதியில் உள்ளவாறு ஒவ்வொரு சொத்துக்களுக்கு உரிய கிரயம் திரண்ட பெறுமானத்தேர்வு வருடாந்த பெறுமான தேய்வு மற்றும் தேறிய பெறுவுமதியை குறிப்பிட்டு அட்டவணைகள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சொத்துக்களின் தேறிய பெறுமதி கிரயம் மாத்திரம் காண்பிக்கப்பட்டு இருந்தன	சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	உள்ளூராட்சி மன்ற நிறுவனங் களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 34 நிலையான சொத்து படைகளின் பெறுமதி ரூபா.1,589,515 தொகை ஆவணங்கள் பொறிகள் உபகரணங்களின் கீழும் இருப்பின் இரண்டு முறை பதிவு செய்த காரணத்தினால் இருப்பு பெறுமதி அப்பெருமானதால் கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது.	2025 ஆண்டு நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக.	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஆ)	பிரதேச சபை அபிவிருத்தி ஒத்துழைப்பு செய்திட்டம் (LDSP - PT 03) கீழ் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த உழவு இயந்திரத்தின் பெறுமதி ரூபா. 4,299,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை	2025 ஆண்டு நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக. .	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும
(இ)	முன்னைய ஆண்டுகளில் மற்றும் மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த ரூபா. 4,997,783 பெறுமதியான பாலங்கள், மதகுகள் மற்றும் ஒழுங்கைகள் மீதிகள் 03 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை	2025 ஆண்டு நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக. .	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும
(ஈ)	பிரதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு செயற்திட்டத்தின் (LDSP)இற்கான வங்கி நடைமுறை கணக்கில் காசேட்டின் பிரகாரம் மீதி பூச்சியமாக இருந்த போதும் நிதிக் கூற்றுகளில் ரூபா. 573,648 ஆன மீதி ஒன்று கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆண்டு நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக. .	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும
(உ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நடைமுறை கணக்கில் நேரடியாக கிடைத்திருந்த காசு மற்றும் காசேட்டில் இடம் பெற்று இருந்த தவறினை திருத்தம் செய்யாததன் பேரில் ஏற்பட்டிருந்த மீதிகளை நிதிக் கூற்றுகளுக்கு சீராக்கம் செய்யாமை காரணமாக ரூபா 1,089,644 வருமானம் ஒன்று நிதிக் கூற்றுகளில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆண்டு நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக. .	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும
(ஊ)	மீளாய்வாண்டின் பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் கீழ் 03 டிஜிட்டல் அறிவித்தல் பலகை கொள்வனவு செய்து பொருத்துவதற்காக ரூபா. 12,124,500 ஆன செலவினம் என்று மேற்கொள்ளப்பட்டு இருந்த போதும் பொருத்துகையின் கீழ் ரூபா. 8,083,000 ஆக ரூபா. 4,181,500 எனக் குறைத்து காட்டப்பட்டிருந்தது.	2025 ஆண்டு நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக. .	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும

(எ)	மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணப்பணி பூர்த்தி செய்யப்படாத 03 செயற்திட்டங்கள் அத்திகதியில் செய்யப்பட்ட வேலையின் பெறுமதி ரூபா. 12,349,807 தொகையை நடைமுறை வேலைகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை	2025 ஆண்டு நிதிக் சரியாக கணக்கீடு கூற்றுக்கள் மூலம் செய்ய வேண்டும சீராக்கம் செய்வதாக. .
(ஏ)	நகர சபையின் உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திடம் பெற்றுக்கொண்ட இடர் கடன்களுக்கு அறவிடப்பட்ட ரூபா. 3,167,509 கடன் தவணைத் தொகை குறுக்குப் பதிவின் மூலம் மீண்டும் செலவினங்களுக்காக் (சம்பளம் மற்றும் வேதனங்கள்) பெறுவனவுகளின் கீழ் பதிவு செய்யப்படாமல் நிதி கூற்றுக்களில் அனுராதபுரம் இடர் கடன் கீழ் செலுத்த வேண்டிய செலவினம் ஒன்றாக தவறாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆண்டு நிதிக் சரியாக கணக்கீடு கூற்றுக்கள் மூலம் செய்ய வேண்டும சீராக்கம் செய்வதாக. .
(ஐ)	முதலீட்டு செயற்பாடுகளில் உருவான காசு பாச்சல் கணக்கீடு செய்யும் போது LG 12 படிவத்தின் பிரகாரம் ஆவணங்கள் பொறிகள் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக பணமாக் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா. 48,385,103 ஆக இருந்த போதும் ரூபா. 90,747,270 என பதிவு செய்யப்பட்ட காரணத்தினால் அப்பெறுமதி ரூபா. 42,362,167 கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது.	2025 ஆண்டு நிதிக் சரியாக கணக்கீடு கூற்றுக்கள் மூலம் செய்ய வேண்டும சீராக்கம் செய்வதாக. .
(ஒ)	காசு பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு செயற்பாடுகளில் உருவான காசு பாய்ச்சலை கணக்கீடு செய்யும் போது செலுத்த வேண்டிய அதிகரிப்பு ரூபா. 32,116,930 ஆக இருந்த போதும் அது ரூபா. 67,239,147 என ரூபா. 35,122,217 ஆன தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆண்டு நிதிக் சரியாக கணக்கீடு கூற்றுக்கள் மூலம் செய்ய வேண்டும சீராக்கம் செய்வதாக. .
(ஓ)	நிதி தொழிற்பாடுகளுக்கு கிடைத்த காசு பாய்ச்சல் கணக்கீடு செய்யும் போது நீண்ட கால கடன் மற்றும் வட்டி திருப்பி செலுத்துதல் ரூபா. 7,395,427 ஆக இருந்த போதும் அது ரூபா 9,664,086 என ரூபா. 2,268,659 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆண்டு நிதிக் சரியாக கணக்கீடு கூற்றுக்கள் மூலம் செய்ய வேண்டும சீராக்கம் செய்வதாக. .
(ஔ)	நிதி செயற்பாடுகள் மூலம் உருவான காசு பாய்ச்சலை கணக்கீடு செய்யும் போது கிடைத்த மீதிகளும் அல்லாத (எல் டி எஸ் பி) ரூபா. 46,773,750 ஆக இருந்த போதும் அது கிடைத்த மூலம் செலவின மானியமாக ரூபா. 68,171,050 தொகை	2025 ஆண்டு நிதிக் சரியாக கணக்கீடு கூற்றுக்கள் மூலம் செய்ய வேண்டும சீராக்கம் செய்வதாக. .

	கணக்கீடு செய்யப்பட்டதால் ரூபா. 21,397,300 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	
(க்)	சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்களில் இருந்து அறவிடப்பட்ட 1 சதவீத அனுமதி பத்திர கட்டணத்துடன் நிலுவை வருமான ரூபா. 453,526 தொகை நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை	2025 ஆண்டு நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக. .	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும

1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டவணையின் பிரகாரம் இயந்திரங்களின் பெறுமதி ரூபா. 22,602,351 ஆக இருந்த போதும், நிதி கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 40,661,865 என இருந்தால் ரூபா. 18,059,514 ஆன இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது	. ஆவணங்கள் சீராக்கம் செய்தாக	கணக்கு புத்தகங்கள் சீராக்கம் செய்யப்பட்டு சரியான பெறுமதிகள் பதிவு செய்யப்பட வேண்டும்

1.6.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
ரூபா. 107,472,915 கூட்டு பெறுமதியான 3 கணக்கு விடயங்களுக்குரிய அட்டவணைகள் மீதி உறுதிப்படுத்த கடிதங்கள் சமர்ப்பிக்காமை காரணமாக திருப்திகரமாக பரீட்சிக்க முடியாமல் இருந்தது	எதிர்காலத்தில் அட்டவணைகளைத் தயாரித்து சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	திட்டவட்டமான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 <u>இணக்கமின்மைகள்</u>

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங் களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	லங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம்			
	நிதிப்பிரமாணம் 571(2) பிரகாரம்	கேள்வி மற்றும் நிர்மாண வைப்புக்கள் என குறிப்பிடப்பட்டுள்ள	வருமானத்திற்கு எடுக்க	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம்

மீளாய்வாண்டின் இறுதியில் 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 16,622,002 பெறுமதி யான 40 வைப்புக்கள் தொடர்பாக தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.	நடவடிக்கை எடுப்பதாக	நடவடிக்கை எடுத்தல் வேண்டும் .

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,588,601 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 712,753 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பிடப் பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	26,633,000	26,633,000	22,055,509	41,627,466	26,733,000	26,733,000	20,418,712	37,049,975
(ii)	வாடகை	124,552,000	124,552,000	107,658,453	108,010,419	114,628,000	114,628,000	97,243,281	91,116,872
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணங்கள்	7,400,000	7,400,000	7,400,000	-	6,600,000	6,600,000	6,600,000	-
(iv)	ஏனைய வருமானம்	71,178,000	71,178,000	71,178,000	-	66,816,000	55,638,566	55,638,566	-
	.	--------------	--------------	-------------	------------	-------------	---------------	---------------	--------------
		229,763,000	229,763,000	208,291,962	149,637,885	214,777,000	203,599,566	179,900,559	128,166,847
		=========	========	=========	=========	=========	=========	========	========

2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) வீதவரி வரியம்		
(i) மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி ரூபா. 23,042,739 மற்றும் ஆண்டின்	சிவப்பு அறிவித்தல் வழங்கப்படுவதற்கும் அவ்வாறு செலுத்தாத	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு

	பட்டியலிடப்பட்ட 19,059,245 உடன் சேகரிக்கப்பட வேண்டிய வீத வரி பெறுமதி ரூபா. 42,101,984 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 18,495,678 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 23,606,307 ஆக இருந்தது. அதன் பிரகாரம் வீரவரி சேகரிப்பு செயலாற்றல் 44 சதவீதமானவை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதால் வருடாந்த வீதவரி நிலுவை உயர்வடைந்திருந்தது.	வர்களுக்கு பிடியானை பாத்திரம் வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்க உள்ளதாக.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை கழிவு பொருட்கள் வரிப் பெறுமதி ரூபா. 14,763,450 ஆக இருந்தது.	தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஆதன வரியை மீதி ரூபா. 3,257,709 ஆக இருந்தது.	அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானத்தை அளவிடுவதற்கு நீதிமன்ற நடவடிக்கைகள் எடுப்பதற்காக ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	**வாடகை**		
(i)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா. 86,632,306 ஆக இருந்தது.	கடைகளை முத்திரை இடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஒரே தடவை (கீமணி) ரூபா. 15,759,890 ஆக இருந்தது	எதிர்காலத்தில் அறவீடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	**சொத்துக்களை குத்தகைக்கு வழங்குதல்**		
(i)	மீனாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு பெற வேண்டிய சொத்துக்கள் குத்தகைக்கு வழங்குதல் மற்றும் தாமத கட்டணங்களின் பெறுமதி ரூபா 5,492,226 இல் மீளாய்வாண்டில் ரூபா. 253,117 ஆன தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் இதன் பிரகாரம் நிலுவைத் தொகை அறவிடல் முன்னேற்றம் 5 சதவீதமான குறைந்த பெறுமதியை கொண்டிருந்தது	நிலுவை சொத்துக்கள் தாமதம் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்காக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாக	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய சொத்துக்கள்	நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக	நிலுவை வருமானத்தை

குத்தகைக்கு வழங்குதல் மற்றும் தாமதக் கட்டணங்கள் மீதி ரூபா. 5,618,222ஆக இருந்தது.	ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணங்கள்		
வட மத்திய மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா. 28,391,775 மற்றும் முத்திரை கட்டணங்கள் ரூபா. 10,830,453 ஆக இருந்தது.	அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவில் எடுத்து வருவதாக .	நசபை வருமானங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

.3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
கதுருவெல புதிய வியாபாரக் கடை தொகுதி மற்றும் வாகன நிறுத்தமிட நிர்மாண ஒப்பந்தத்தின் விலகளல வேலை மற்றும் மேலதிக வேலை விடயங்களுக்காக ஒப்பந்தம் வழங்கும் போது விலையை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு மேற்பட்ட விலைகளை பயன்படுத்தி ரூபா 11,404,818 ஆன மேலதிக தொகையொன்று ஒப்பந்ததக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்தது.	பொதுச்சபை அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பினை செய்யப்பட்டிருந்ததாக	உடன்படிக்கை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்த விலைகளை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2022 ஜுலை 07 திகதி உள்ளுராட்சி மன்ற திணைக்களத்தின் மூலம் தேங்காய் உடைக்கும் தொழில் முயற்சி செயற்பாடு ஏற்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா. 926,600 தொகை உரிய நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தாமல் பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	நிதியம் கிடைத்த நோக்கத்துக்கு பயன்படுத்துவதாக	நிதியத்தை குறித்த செயற் திட்டத்துக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும்
(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியதாக காணப்படுகின்ற கூடுதலாக செலுத்தப்பட்ட உறுப்பினர் தொலைபேசி மற்றும் போக்குவரத்து பணிகள் ரூபா 216,835 தொகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த உத்தியோ கத்தர்கள் மரணித்துள்ளதாலும் வெளிநாடு சென்றுள்ள தாலும் மீண்டும் அவர்களின் குடும்பங்களுக்கு கடிதத்தின் மூலம் அறிவித்து எதிர்வரும்	கூடுதலான கொடுப்பனவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

		நடவடிக்கைகளை மேற்கொள்வதாக	
(இ)	2018 ஆம் ஆண்டில் தமன்கடுவ பிரதேச சபை கலைக்கப்பட்டு சொத்துக்கள் பொறுப்புகளை பிரிக்கும் போது பொலன்னருவ மாநகர சபைக்கு வழ்கப்பட்டிருந்த ரூபா. 54,493,941 பெறுமதியான 04 கணக்கு மீதிகள் 6 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பாக எந்த ஒரு தகவலும் தேடிக்கொள்ள முடியாது இருந்ததாக	கணக்கு மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஈ)	மீளாய்வாண்டு வரை மூடப்பட்டிருந்த 140 வியாபார நிறுவனங்களுக்கு மற்றும் கழிவு பொருட்களை ஏற்காத 71 நிறுவனங்களுக்கும் மீளாய்வாண்டுக்காக பட்டியலிடல் இடம் பெற்றிருந்தது. இவ்வாறு வருடாந்த கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளாமல் கட்டணங்கள் அறவிட முடியாத நிறுவனங்களுக்காக பற்றிலிடல் அதற்கான காரணம் போலியான நிலுவைத் தொகையொன்று காண்பிக்கப்பட்டிருந்தது	2025 ஆம் ஆண்டில் கழிவு பொருட்களை வழங்கும் நிறுவனங்கள் இனங் காணப்பட்டு அதன் பிரகாரம் கழிவு பொருள் வரி பதிவேடு நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக	சரியான தகவல்களைப் பெற்றுக் கொண்டு வருமான மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	மாநகர சபையால் 2015 மதிப்பீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது வீத வரி அறவிடப்பட்டிருந்ததுடன் காலரீதியாக மதிப்பீடு செய்யப்பட்டு அதன் மீது வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மதிப்பீட்டு திணைக்களத்துக்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக	05 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
(ஊ)	சுற்றுலா சபையில் பிவசெய்யப்பட்ட ஹொட்டல் களில் இருந்து அறவிடப்படுகின்ற 1 சதவீத அனுமதிப்பத்திர கட்டணத்தை செலுத்த வேண்டிய 04 நிறுவனங்கள் 02 ஆண்டுகள் முதல் 05 ஆண்டுகள் வரையான காலப் பகுதியில் நிதிக்கூற்றுக்களை மாநகர சபைக்கு சமர்ப்பிக்காத இருந்த போதும் அது தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகளை மீளாய்வாண்டிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு உள்ளதாக	நிதி கூற்றுக்களை பெற்று கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து சரியான வருமானம் சேகரிக்கப்பட வேண்டும்
(எ)	கதுருவெல புதிய வியாபார தொகுதி மற்றும் வாகன தரிப்பு நிர்மாண திட்டத்தின் பிரகாரம் இந்த கட்டிடத்தில் 665.41 சதுர மீற்றர் அளவாக இருந்த போதும் அதில் 50 சதவீத அளவு வெற்று இடத்துடன் திட்டமிடப்பட்ட காரணத்தினால் வருமானத்தை உழைப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் முடியாதன் பேரில் பொருளாதார பாதக நிலைமையொன்று மாநகர சபைக்கு ஏற்பட்டுள்ளதாக	மதிப்பீடு மற்றும் திட்டத்தின் பிரகாரம் நிர்மாணத்தை மேற்கொள்வதாக	வருமான உழைப்புக்கு பொருத்தமான திட்டங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும்.
(ஏ)	கதுருவெல புதிய வியாபாரம் தொகுதி மற்றும் வாகனம் தரிப்பு நிர்மாணிக்கும் போது முறையாக , சாத்தியவள ஆய்வு ஒன்றும் மேற்கொள்ளாமல் மாநகர முதல்வரின் வாய்மொழி அறிவுறுத்தலின் பிரகாரம் இரண்டு மாடி கட்டிடத்தில் இருந்து நான்கு மாடி கட்டிடமாக மாற்றப்பட்டு இருந்தது.	இதன்பிறகு இடம்பெறாமல் இருக்க தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக.	கட்டமைப்பு மாற்றம் தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதற்கும் எஞ்சிய

இங்கு தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்வது போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. நிதி இல்லாத காரணத்தின் பேரில் கட்டிடத்தின் நிர்மாணப் பணி பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை.		வேலைகளை பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

3.3 விளைவற்ற குறைப்பயன்பாட்டிலுள்ள ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பசபைக்கு சொந்தமான உழவு இயந்திரம் மற்றும் டேலர் ?தேவைக்கு பொருந்தாமையால் 02 இற்கும் 03 இற்கும் இடைப்பட்ட காலம் பட முடியாத 05 விளைவற்று காணப்பபட்டன.	திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக வதாக.	சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

3.4 செயற்திட்டங்கள், பணிகள் அல்லது மூலதன வேலைத்திட்டங்களின் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
கதுருவெலவில் புதிய வர்த்தக கடைத் தொகுதி மற்றும் வாகன நிறுத்திமிடத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ரூபா 29,700,000 தொகை உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியிலிருந்து பெறப்பட்டு 2030 ஏப்ரல் மாதத்திற்குள் கொடுப்பனவு பூர்த்தி செய்ய வேண்டிய கடன்தொகயாக இருந்தது. கட்டமைப்பு மாற்றங்கள் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நிர்மாணத்தை முடிக்க முடியாததால் மீளாய்வாண்டின் இறுதி திகதியின் பிரகாரம் தவணைகளில் ரூபா 5,967,461 மற்றும் வட்டியாக ரூபா 3,722,616, அதாவது மொத்தம் ரூபா 9,690,077 நிலுவையாக உள்ளது.	செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 9,690,077 ஆகும்.	கடன்கள் தொடர்பான தவணைகளை உரிய திகதியில் செலுத்த வேண்டும்.

3. 5 பெறுகை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கதுருவல ஷொப்பிங் காம்ப்ளக்ஸின் கட்டுமானப் பணிகள் 2023 நவம்பர் 30, ,றகுள் முடிக்கப்படா விட்டாலும், தேசிய போட்டி ஏல முறையின் கீழ் ஏலங்கள் கோரப்பட்டிருந்தன, ஆனால் கேள்விதாரரர் இல்லாததால், ஏலங்களை அழைப்பது தொடர்பான அனைத்து நிபந்தனைகளும் மாற்றப்பட்டு மீண்டும் 2024 ஜனவரி 29, ஆந் திகதி தேசிய போட்டி ஏல முறை இல்லாமல் தனி தனி கடைகளுக்குப் பதிலாக முழு கட்டிடமும் பிராந்திய போட்டி ஏல முறையின் கீழ் கேள்வி வழங்கப்பட்டிருந்தது.	தேசிய போட்டி ஏல முறையின் கீழ் எந்த கேள்விதாரர் முன்வராத காரணத்தினால், பிராந்திய போட்டி ஏல முறைமை ஏற்றுக கொள்ளப்பட்டதாக.	முறைப்படி குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	கடைகள் தனித்தனியாக குத்தகைக்கு விடப்பட்டிருந்தால், 10 கடைகளுக்கான	நிர்மாணப் பணிகள் முடிந்த பிறகு, முறையான மதிப்பீடு	முறைப்படி குத்தகைக்கு

	தற்காலிக மாத வாடகை ரூபா. 810,000 ஆக இருந்ததுடன் அவ்வாறு குத்தகைக்கு வழங்காமல் ஒரு கேள்விதாரருக்கு முழு வியாபார வளாகத்திற்கும் தற்காலிக வாடகை ரூபா. 400,000 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மாநகர சபைக்கு மாதந்தம் ரூபா. 410,000 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.	மேற்கொள்ளப்பட்டு அந்த வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	10 கடைகளும் தனித ˙தனியாக குத்தகைக்கு விடப்பட்டால், ஓரே தடைவ பணம் ரூபா 5,500,000 ஆக இருந்ததுடன் அவ்வாறு குத்தகைக்கு வழங்காமல் ஒரு நபக்கு குத்தகைக்கு விடப்படும் போது, ஒரே தடைவ பணம் ரூபா. 32,500,000 என குறிப்பிடப்பட்டது. அதன்படி, இந்த சந்தர்ப்பத்தில், மாநகர சபைக்கு ரூபா 18,000,000 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.	வாங்குபவர் ஒரே தடவைத் தொகையில் 50 சதவீதம், அதாவது ரூபா. 16,250,500 செலுத்தியுள்ளதுடன் அதில் ரூபா. 15,000,000 ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டுள்ளதாக.	பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

கதுருவெல வியாபார கட்டிடத் தொகுதி மற்றும் வாகன நிறுத்துமிட நிர்மாணம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வர்த்தக கடைத் தொகுதியை இரண்டு மாடி கட்டிடமாக நிர்மாணிப்பதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, ஒப்பந்ததாரருடன் ஒப்பந்தத்தில் ரூபா 32,497,815 பெறுமதி 2022 பெப்ரவரி 21 ஆந் திகதி ஒப்பந்ததாரருடன் இனங்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டது. திட்டம் அங்கீகாரம் இல்லாமல் நான்கு மாடி கட்டிடமாக கட்டுவதற்கு ரூபா. 65,783,475 என்ற புதிய மதிப்பீட்டை 2022 ஆகஸ்ட் 23 ஆந் திகதி நடைபெற்ற பொதுக்குழு மூலம் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டது.. பெறுகை ˙ வழிகாட்டுதல்களின் படி புதிய மதிப்பீட்டின் படி ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.	ஒரே இடத்தில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் வேலை செய்யும் போது சிக்கல் நிலைமை ஏற்படக்கூடும் என்பதால், பொதுச் சபையின் அங்கீகாரத்துடன் ஒப்பந்ததாரருக்கே ஒப்பந்தம் வழங்கப்பட்டது என்பதாக	பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	குறித்த மாற்றங்களுக்கு ஏற்படும் மேலதிக தொகையான ரூபா 36,083,475 சபை நிதியிலிருந்து செலுத்த முடியுமா என்பதை முறையாக மதிப்பீடு செய்யாமையால் மீளாய்வாண்டின் இறுதி திகதி அளவில் ஒப்பந்ததாரருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 22,558,607 தொகையை கொடுப்பனவு செய்வதற்குத முடியாதிருந்தது.	2025 ஜனவரி 16 ஆந திகதி அளவில் வேலை நிறைவு பட்டியல்களுக்கு ஒப்பந்தக்காரருக்கு ரூபா 22,558,607 தொகையை செலுத்த வேண்டியுள்ளதாக.	மாற்றங்களுக்கான நிதி ஏற்பாடுகள் உள்ளனவா பரீட்சித்து மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்..
(இ)	அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.12.1 மற்றும் 8.12.2 இன் பிரகாரம் மேற்கொள்ளப்படும் வேலையின் தரம்	பரீட்சித்து கொடுப்பனவு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா கவும் , வண்ணப்பூச்சு	பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.12.1

	தொடர்பான ஒப்புக்கொள்ளப்பட்ட விவரக்குறிப்புகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி பணி முடிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்த பின்னரே பணம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் தொடர்புபட்ட உத்தியோகத்தர்கள் மேற்கூறிய நிர்மாணனத்தில் உள்ள அனைத்து பணிகளும் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக சான்றளித்திரந்தனர் மற்றும் வேலை பூர்த்தி செய்யப்படாத 06 வேலை விடயங்களுக்கு ரூபா. 1,699,096 பெறுமதியான பணத்தை கொடுப்பனவு செய்வதற்கு பரிந்துரைத்திருந்தனர்.	பூசப்பட்ட பிறகு கையில் ஒரு பூச்சு விளைவைக் கொண்டிருப்பதும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக .	மற்றும் 8.12.2 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	அளவீட்டுத் தாள்களின் பிரகாரம், Slab, beam மற்றும் staircase formwork பொருட்களுக்கு 12 mm லேமினேட் ப்ளைவுட் ஷட்டரிங் பயன்படுத்தப்பட்டுள்ளது, அந்த மென்மையான மேற்பரப்புகளில் 15 mm தடிப்பிலான சாந்தினை மீண்டும் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை, மேலும் BSR அறிவுறுத்தல்கள் உட்கூரை சாந்து பூசுவதற்கு ரூபா. 1,473,789 கொடுப்பனவு செய்வதற்கு பரிந்துரைத்திருந்தனர்.	மேற்பரப்பை கரடுமுரடாக வைத்திருக்கவும், நிர்மாணப் பலவீனத்தைப் பாதுகாக்கவும், Slab beam மற்றும் Staircase பிளாஸ்டர் பூசப்பட்டதாக. .	BSR இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வேண்டும்.

3.7 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	நகர சபையின் சிரேஷ்ட மட்டத்திற்குரிய 6 பதவிகள் இரண்டாம் நிலைக்கரிய 28 பதவிகள், ஆரம்ப நிலைக்கரிய 11 பதவிகளாக 45 வெற்றிடங்கள காணப்படுவதாகவும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரியதல்லாத 06 பதவிகளில் மிகையொன்ற காணப்பட்டது.	வெற்றிடங்களை நிரப்புவதற்கான உரிய நிறுவனங்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக .	வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	ஆரம்ப மட்டத்திற்குரிய தொழில் நுட்பவியலாளர். கொத்தனார் ஓட்டுநர் தச்சர், அலுவலக உதவியாளர் விளையாட்டரங்கு பொறுப்பாளர், 05 வீதி தொழிலாளர்கள் தொழிலாளர் பதவிகள் என 11 பதவிகள் வெற்றிடங்களாகவும் 02 சாரதி பதவிகள் நூலக உதவியாளர் பதவியொன்று, சுகாதார தொழிலாளர் பதவியொன்று என 04 பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன.	வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக உரிய நிறுவனங்களுக்கு அறிவித்துள்ள தாகவும் மிகை ஊழியர்கள் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்.	வெற்றிடங்களை பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
(இ)	மாநகர சபையின் வெவ்வேறு பதவிகளுக்குரிய சேவை புரிகின்ற உத்தியோகத்தர்கள் 56 பேர் தமது நிரந்தர பதவிகளுக்கு உரித்தல்லாத ஏனைய பதவிகளில் கடமைகளில் 01 ஆண்டு முதல் 07 ஆண்டுகள் காலமாக நிறைவேற்றி வந்தனர்.	பொலன்னறுவை மாநகர சபையின் பதவிகளை அங்கீகரிக்கும் போது சில பதவிகள் அதிக அளவில் தேவையாக இருந்த போதும் மட்டுப்படுத்தப்பட்ட சில பதவிகள் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டதால்	நிரந்தர பதவிகளுக்குரிய கடமைகள் கையளிக்கப்பட வேண்டும்.

ஏனைய ஊழியர்களை ஈடுபடுத்தியதாக.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் ஒழுங்குபடுத்தலின் பிரகாரம் மாநகர சபையால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் நியதிகள் இனங்காணப்பட்டு செயற்படுத்தல் இடம்பெற்றிருருக்கவில்லை.	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் நிகழ்ச்சிகள் மற்றும் நியதிகள் இனங் காணப்பட்டு செயற் படுத்தப்பட்டுள்ள்தாக	சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் நியதிகளுக்கு இணங்க வேண்டும்.